2014 பிப்ரவரி 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

20—

நியாய விலைக் கடை

***17954—திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், மூளிப்பட்டி ஊராட்சி, தவசிலிங்கபுரம் கிராமத்திற்குப் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஒன்றியம், மூளிப்பட்டி ஊராட்சியிலுள்ள மருதநத்தம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 470 குடும்ப அட்டைகளுடன் மருதநத்தம் தாய் நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் 2 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள 167 குடும்ப அட்டைகளைக் கொண்ட தவசிலிங்கபுரம் கிராமம் இணைக்கப்பட்டுள்ளது. அரசு விதிகளின்படி, மேற்படி கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. என்றாலும்கூட, தவசிலிங்கபுரம் கிராமத்திலிருந்து தாய்க்கடை அமைந்துள்ள மருதநத்தம் கிராமத்திற்குச் செல்வதற்கு மழைக் காலங்களில் ஓடை தடையாக இருப்பதால், 3 கிலோ மீட்டர் தூரம் சுற்றி வர வேண்டிய நிலையுள்ளது. சரியான போக்குவரத்து வசதி இல்லை என்பதைக் கருத்தில் கொண்டும், சிறப்பினமாக இதைக் கருதியும் தவசிலிங்கபுரம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை திறப்பது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத்

தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசும்பொன்னாரின் வீரமும், அம்பேத்கரின் அறிவுக் கூர்மையும், கர்மவீரரின் எளிமையும், புரட்சித் தலைவரின் மனித நேசமும் ஒருங்கிணைந்து (மேசையைத் தட்டும் ஒலி) உதித்தெழுந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வணக்கம் கூறி, தவசிலிங்கபுரம் கிராம மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, 177 குடும்ப அட்டைகள் இருந்தும்கூட, அந்த இடத்திற்குப் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க ஆவன செய்யப்படும் என்று உறுதி கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் அமைந்திருக்கின்ற தட்டாங்குளம்பட்டி கடை எண் 2—ல் ஏற்கெனவே 1,178 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. ஏற்கெனவே இதே அவையில் நான் மானியக் கோரிக்கையில் பேசுகிறபோது, இதுகுறித்துப் பேசியிருக்கின்றேன். 78 குடும்ப அட்டைகள் இருக்கின்ற தட்டாங்குளம்பட்டியில் கடை அமைந்திருக்கின்றது. 1,100 குடும்ப அட்டைகள் இருக்கின்ற திருவண்ணாமலை, மாதா நகர், மாலைப்பட்டி, என்.பி.எஸ். காலனி போன்ற பகுதிகளில் கடை இல்லை. இதனைத் தொடர்ந்து, சமீபத்தில் அங்கே ஒரு சட்டம்—ஒழுங்குப் பிரச்சினைகூட ஏற்படுவதற்கான வாய்ப்பு இருந்தது. இதையெல்லாம் கவனத்தில் கொண்டு, அந்தப் பகுதியில் தனியாகக் கடை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு*

2014 பிப்ரவரி 1]

பகுதிநேர நியாய விலைக் கடை கேட்கிறார். குறிப்பாக, பகுதிநேரக் கடை திறப்பதற்கு 150 கார்டுகள் இருந்தால் போதுமானது. கார்டுகளைப் பிரித்த பிறகு 500 கார்டுகள் தாய்க் கடையில் இருந்தால், அந்தக் கடையைப் பிரிப்பதற்கு வாய்ப்புண்டு. மேலும், 1½ கிலோ மீட்டர் தொலைவில் நியாய விலைக் கடை இருக்கவேண்டும் என்று சட்டவிதிகள் இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை இருக்கிறது என்று கருதும்பட்சத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே அந்தப் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கலாம். அதற்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தக் கடை, எவ்வளவு தூரத்தில் இருக்கிறது, எவ்வளவு கார்டுகள் இருக்கின்றன என்பதைத் தெளிவாக குறிப்பிட்டுச் சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அந்தப் பகுதி மக்களின் குறையைத் தீர்க்க உறுதியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

21—

மேம்பாலம்

***35867—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, சோழவந்தானில் இருப்புப் பாதை கடவுக்கு மாற்றாக மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?